Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk | WEDNESDAY JULY 21 2021

தமிழ் Mirror

www.tamilmirror.lk

ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்

புதன்கிழமை ஜூலை 21 , 2021 | ஒளி: 07 கதிர் 52 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

'4ஆவது அலையின் விளிம்பில் இலங்கை'

வைத்தியர்கள் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் நான்காவது அலையின் முதல் பாதியை இலங்கை நெருங்கியுள்ளதாக இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைக் கூறியதுடன், கொழும்பில் டெல்டா திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின்எண்ணிக்கை 50 சதவீதமாக அதிகரிக்கக்கூடும் எனவும் எச்சரித்தார்.

வைத்தியசாலைக் கட்டமைப்புத் தொடர்பில் தமக்குக் கிடைக்கின்ற தகவலின் அடிப்படையில் கொரோனா வைரஸின் நான்காவது அலையின் முதல் பகுதியை அண்மித்து வருவதை இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் என்ற அடிப்படையில் மக்களுக்கு அறிவுறுத்துவதாக அவர் கூறினார்.

கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலத்தைப் போன்றே இக்காலப்பகுதியிலும் தேசிய வைத்தியசாலைக்கு அதிகமான கொரோனா நோயாளர்கள், வருகை தருகின்றனர் என்று அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

அடையாளத்தை மாற்றி

பெண்களின் தகவலை திரட்டிய 'அஸ்மா உம்மா' கைது

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய நிலையில், தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெயாங்கொட, நைவல பகுதியில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த இப்பெண், சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்துகொள்வதாக தனிமைப்படுத்தல் நிலைய அதிகாரிகள், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து, 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் (19) அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண,

தொடர்ச்சி P2

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றில் இரண்டால்

தோற்கடிப்பு

- 61 பேர் ஆதரவு: 152 பேர் எதிர்ப்பு
- சம்பந்தனுக்கு உதவிய ரணில்
- ஹரீன், விஜேதாச வரவில்லை
- சஜித் தரப்பின் முதலாவது தோல்வி
- மு.க எம்.பிகளும் நழுவினர்
- 12 எம்.பிகள் சபைக்கு வரவில்லை

பா.நிரோஸ்

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மேலதிகமான 91 வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராகவும், எதிர்க்கட்சி தலைவருமாக கொண்டுவரும் முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவாகும். அப்பிரேரணையும் தோல்வியடைந்துள்ளது.

இரண்டு நாள்கள் விவாதிக்கப்பட்டு நேற்று (20) மாலை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது பிரேரணைக்கு ஆதரவாக 61 பேரும், எதிராக 152 பேரும் வாக்களித்திருந்தனர். அதன்பிரகாரம் 91 மேலதிக வாக்குகளால், பிரேரணை தோல்வியடைந்தது.

எதிர்க்கட்சிகளான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இதேவேளை வாக்கெடுப்பில் கலந்துக்கொண்டிருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆசனத்திலிருந்து எழுந்து வாக்களிப்பதற்கு அருகிலிருந்த ரணில் கைக் கொடுத்து அவருக்கு உதவினார். வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ, விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் பாராளுமன்றத்துக்கு வருகைதரவில்லை.

தொடர்ச்சி P2

உஸ்பெகிஸ்தான் பெண் பாலியலுக்கு விற்பனை

மனைவி வழியில் சென்ற கணவனும் கைது

உஸ்பெகிஸ்தான் பிரஜையான பெண்ணொருவரை நாட்டுக்கு அழைத்துவந்து பாலியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை தொடர்பில் வெள்ளவத்தையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (20) தெரிவித்தார்.

31 வயதான ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் (19) கைது செய்யப்பட்டுள்ளனார் எனக் கூறிய அவர், தொழில் பெற்றுத்தருவதாக கூறி,

தொடர்ச்சி P2

சமையல் எரிவாயுவின் விலை குறைகிறது

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 18 லீற்றர் சமையல் எரிவாயுவை 1,150 ரூபாய்க்கு விற்பனை செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த அமைச்சரவை யோசனைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. குறித்த சமையல் எரிவாயுவை 1,395 ரூபாய்க்கு லிட்ரோ நிறுவனம் அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்தது.

இதேவேளை, இலங்கையில் சமையல் எரிவாயு விநியோகத்தில்,

தொடர்ச்சி P2

'ரணிலின் திருத்தம் செல்லாது'

சபாநாயகர் அறவிப்பு

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நிராகரித்தார்.

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான

தொடர்ச்சி P2

சட்டம் அனைவருக்கும் சமமானது:

முஸ்லிம் திருமணம் தொடர்பில் அமைச்சரவை விசேட அனுமதி

இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ், திருமணம் மற்றும் விவாகரத்து செய்வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குடியியல் சட்டக்கோவை மற்றும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையில் திருத்தம் செய்யும் வகையில், நீதியமைச்சர் அலி சப்ரி முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

இஷாலினி குறித்த

வைத்திய அறிக்கையில் வெளியாகிய அதிர்ச்சி

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்குச் சொந்தமான கொழும்பிலுள்ள வீட்டிலில் பணிப் பெண்ணாக வேலைசெய்த ஜூட் குமார் இஷாலினி என்ற சிறுமி, பல மாதங்களாக, நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எரிகாயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்த ஜூட் குமார் இஷாலினியின் நீதிமன்ற வைத்திய அறிக்கையிலேயே மேற்கண்ட விவரம் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2



சினோ:பார்ம் தடுப்பூசியின் வினைத்திறன் உயர்வானது

ஆய்வில் தகவல்

சினோஃபார்ம் தடுப்பூசி, டெல்டா வைரஸ் பிறழ்வுக்கு எதிராக மிகுந்த வினைத்திறனுடன் செயற்படுகின்றமை ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் சினோஃபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்களின் நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்துள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

'பேச்சு தோல்வி; வியாழன் ஆர்ப்பாட்டம்'

பகிஷ்கரிப்புத் தொடரும் என்கிறார் மஹிந்த

ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் நேற்று (20) காலை இடம்பெற்ற பேச்சுவார்த்தை, இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளதுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் வியாழக்கிழமை (22) கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடுகள் தொடர்பான தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண அடுத்த திங்கட்கிழமை (26) கூடும் அமைச்சரவையில் திட்டமொன்றை சமர்ப்பிப்பதாக கல்வி அமைச்சர் உறுதியளித்த போதிலும், நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடத் தயாராக இல்லை என்று பேச்சுவார்த்தையில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக தங்களின் தொழிற்சங்க

தொடர்ச்சி P2

ரிஷாட்டின் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் மரணமடைந்த சிறுமிக்கு நீதி கோரி, ரிஷாட் பதியூதீனின் கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று, நேற்று (20) முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மக்கள் காங்கிரஸின் ஏற்பாட்டில், இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் புதிய ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் ரவிகுமார்,

தொடர்ச்சி P2

'விசாரணைகளை கண்காணிப்போம்'

முற்போக்குக் கூட்டணி அறிவிப்பு

பா.நிரோஸ்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் பணிப்புரிந்த சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, தனியான பொலிஸ் குழு அமைக்கப்பட்டு, இந்த விசாரணைகள்

தொடர்ச்சி P2

சகோதரிக்கு நீதி கோரி யாழில் தனிநபர் போராட்டம்

என்.ராஜ். எம்.றொசாந்த். எஸ்.நிதர்ஷன்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டும் எனக் கோரி, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக, மலையகத்தைச் சேர்ந்த ஒருவர், நேற்று (20) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தனது தங்கையின் இறப்புக்கு நீதி வேண்டும், சிறுமியின் மரணம் தொடர்பில் நேரடியாக ஜனாதிபதி தலையிட்டு, நீதி பெற்றுத்தர வேண்டும், சிறுமியின் மரண விசாரணை

தொடர்ச்சி P2

'சிறுமிக்கு நீதி கிடைக்க ரிஷாட் ஒத்துழைக்க வேண்டும்'

பா.நிரோஸ்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் எரியுண்டு உயிரிழந்த மலையக சிறுமிக்கு நீதி கிடைக்க பொறுப்புள்ள அரசியற் கட்சியின் தலைவர் என்கிற ரீதியில் ரிஷாட் பதியுதீன் ஒத்துழைக்க வேண்டுமென கூட்டமைப்பு எம்.பி

தொடர்ச்சி P2

'மெழுகுவர்த்தி ஏற்றுங்கள்'

இ.தொ.கா வேண்டுகோள்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த இஷாலியின் மரணம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இ.தொ. காவின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

தோற்கடிப்பு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க, அவரது கட்சியின் எனைய எம்.பிகளான ஹாரிஸ், பைசல் காசிம், நசீர் அஹமட், தௌபீக் ஆகியோர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை. .

மேலும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களான ஹரீன் பெர்ணான்டோ, குமார வெல்கம, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி எம்.பி.யான சி.வி.விக்னேஸ்வரன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான ரிஷாத் பதியூதீன், விஜேயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட 12 எம்.பி.க்கள் சபைக்கு வருகை தரவில்லை.

இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பி.க்களான இஷாக் ரஹ்மான் , முஷாரவ் ஆகியோரும் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு எம்.பி.யான அலி சப்ரி ரஹீம் சுயாதீன எம்.பி.யாக செயற்படும் அத்துரலிய ரத்தின தேரரும் எதிராக வாக்களித்தனர்.

இதனடிப்படையில், நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியைத் தழுவிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பெண்களின் தகவலை திரட்டிய 'அஸ்மா உம்மா' கைது

நேற்று (20) தெரிவித்தார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த பாத்திமா ரம்சா என்ற அந்தப் பெண், 2019 பெப்ரவரி 6ஆம் திகதி 'அஸ்மா உம்மா' என்ற பெயரிலிருந்த போலி அடையாள அட்டையுடன், சவுதி அரேபியாவுக்கு பயணித்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த ஏனைய பெண்களின் தகவல்களை அந்தப் பெண் எதற்காக சேகரித்தார் என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவின் விலை குறைகிறது

நுகர்வோருக்கு 20 சதவீதம் பூர்த்தி செய்யும் லாப் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ள நிலையில், அதனை நிவர்த்தி செய்யும் தன்மை லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்துக்கு உள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்கால தேவையின் மேலதிகமான கொள்ளளவை கொண்டு வருவதற்கான இயலுமை, விநியோக கட்டமைப்பு தம்மிடம் உள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே, சந்தையில் எந்தவொரு விதத்திலும் சமையல் எரிவாயு பற்றாக்குறை ஏற்படாதென்றும் இது குறித்து நுகர்வோர் வீண் அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சினோ:பார்ம் தடுப்பூசியின் வினைத்திறன் உயர்வானது

கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இது தொடர்பான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சினோஃபார்ம் பெற்றுக்கொண்ட 95 வீதமானோரின் நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது வேகமாகப் பரவி வரும் டெல்டா வைரஸ் தொற்றுக்கு எதிராகவும் சினோஃபார்ம் தடுப்பூசி வினைத்திறனுடன் செயற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களான நீலிகா மாலவிகே, சந்திம ஜீவந்தர உள்ளிட்ட குழுவினர் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வுக்கு அமைய, சினோஃபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட 20- 39 வயதுடையவர்களிடையே நோயெதிர்ப்பு சக்தி 98.9 சதவீதத்தாலும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே 93.3 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சினோஃபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட 282 பேரிடையே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'ரணிலின் திருத்தும் செல்லாது'

நம்பிக்கையில்லா பிரேரணையில் திருத்தம் மேற்கொண்டு முழு அமைச்சரவைக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாக அதனை மாற்றுமாறு ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் (19) யோசனை முன்வைத்தார்.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் நிலையியற் கட்டளையின் பிரகாரம் இவ்வாறான திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என சபாநாயகர், நேற்று (20) சபையில் அறிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கடந்த 22ஆம் திகதி எதிர்கட்சியின் 43 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தோடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற செயற்குழு கூட்டத்தில் இதில் எதிர்காலத்தில் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பில் அறிவுறுத்தப்படவில்லை.

அதை போல் நேற்று முன்தினம் நம்பிக்கையில்லா பிரேரணையானது அமைச்சர் உதய கம்மன்பிலவை அடிப்படையாக வைத்து முன்வைக்கப்பட்டது. நிலையியற் கட்டளை கீழ், இச்சந்தர்ப்பத்தில் அதில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என தெரிவித்த சபாநாயகர், இது பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணானது என்பதால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

'பேச்சு தோல்வி; வியாழன் ஆர்ப்பாட்டம்'

நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி, வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் இன்று 10ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று, நேற்று இடம்பெற்றது.

முஸ்லிம் திருமணம் தொடர்பில் அமைச்சரவை விசேட அனுமதி

அரசியலமைப்பின் 12ஆவது சரத்தில் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்தவொரு காரணமாகவும் எந்தப் பிரஜையும் ஒரங்கட்டுதல் ஆகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், முஸ்லிம்களின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தில் பெண்கள் ஒரங்கட்டப்படும் ஒரு சில ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான ஏற்பாடுகளை சட்டத்திலிருந்து நீக்குவதற்கான தேவையை பல்வேறு மகளிர் அமைப்புக்கள், முஸ்லிம் சமூகத்தவர்கள் மற்றும் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதனால், இலங்கைப் பிரஜைகளின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் பொதுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம் சமூகத்தவர்களின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் மாற்று வழிகளை அவர்களுக்கு வழங்குவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ், திருமணம் செய்வதற்கு எதிர்பார்ப்பதாயின், அவர்களுக்கு குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வகையில் குடியியல் சட்டக் கோவை மற்றும் குடியியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ள திருமண வழக்குகள் தொடர்பான நடைமுறைகளைத் திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

'விசாரணைகளை கண்காணிப்போம்'

மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள முயற்சிப்பதாகவும், எனினும் அவர் தனது தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிப்பதில்லை எனவும் தெரிவித்தார். "இதுவொரு இனப் பிரச்சினையோ, அரசியல் பிரச்சினையோ அல்ல. இது சமூகப் பிரச்சினை. எனவே, அரசாங்கம் இது தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும். சபையில் உரையாற்றிய ஆளுங்கட்சியினர், இச்சம்பவத்தின் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் தலையில் சுமத்த முயற்சிக்கிறார்கள். அது தவறு. நாட்டில் நடப்பது ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கமல்ல" எனவும் தெரிவித்தார். "மேலும், இந்த விசாரணைகளை புதிய பொலிஸ் குழு ஒன்றுக்கு வழங்க வேண்டும். இந்த விசாரணையிலிருந்து பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலசூரியவை அகற்ற வேண்டும். அவரது விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை. புதைக்கப்பட்ட இஷாலியின் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு, புதிய சட்டவைத்திய விசாரணை அறிக்கைப் பெறப்பட வேண்டும். இது தமிழ் முஸ்லிம், சிங்கள இனப்பிரச்சினை அல்ல. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை" எனவும் அவர் தெரிவித்தார்.

'சிறுமிக்கு நீதி கிடைக்க ரிஷாட் ஒத்துழைக்க வேண்டும்'

கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், "தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், குறைந்து இரு தசாப்தங்களுக்கு ஆட்சியில் இந்த அரசாங்கம் நீடிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆட்சிக்கு வந்த ஒரு வருடங்களுக்குள்ளே நாட்டு மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டது" என்றார்.

"மேலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் ஊடக சுதந்திரம், தனிமனித சுதந்திரம், போராடும் சுதந்திரம் உள்ளிட்ட அரசமைப்பில் உள்ள சுதந்திரங்கள் கூட இல்லாதுபோகுமென எதிர்பார்க்கப்பட்டது. அது அப்படியே தற்போது நடந்து வருகிறது.

"தனிமைப்படுத்தல் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் அனைத்தும் அடக்கியாள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தும் பணிகளில், துறைசார் நிபுணர்களை இராணுவமே வழிநடத்துகிறது.

"இருக்கிறப் பிரச்சினைகளுக்கு மத்தியில் மேலும் பல பிரச்சினைகளை சேர்த்துக்கொண்டு, தன் தலையில் மண்ணை வாரியிரைத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது" எனவும் தெரிவித்தார்.

தேயிலைச் செடிக்குள் சிசு; கௌவ்வி இழுத்த நாய்

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொங்கோடியா தோட்டத்தின் தேயிலை மலையிலிருந்து, உடல் பாகங்கள் சிதைவடைந்த நிலையில் சிசு ஒன்றின் சடலத்தை, கந்தப்பளை பொலிஸார் நேற்று (20) மதியம் மீட்டுள்ளனர்.

பிறந்து ஒரிரு நாள்களான ஆண் சிசுவென்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக கந்தப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.டி. விக்கிரமசிங்ஹ தெரிவித்தார்.

கொங்கோடியா தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள், நாயொன்று சிசுவின் சடலத்தை கௌவ்விக்கொண்டு வருவதைக் கண்டு, கந்தப்பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சிசுவின் உடலை மீட்டுள்ளனர்.

சிசுவின் சடலம், பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிபதியின் உத்தரவின் பேரில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

'4ஆவது அலையின் விளிம்பில் இலங்கை'

கொழும்பு நகர சபைக்குள் 100க்கு 30 சதவீதமான டெல்டா தொற்றாளர்கள் உள்ள நிலையில், டெல்டா தொற்றுக்குள்ளானவர்களின் எச்சிலில் இந்த வைரஸ் செறிவு அதிகமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

இந்த டெல்டா திரிபு மிக வேகமாக ஒரு சில வாரங்களிலோ அல்லது ஒரு மாதத்துக்குள்ளோ நாடு முழுவதும் பரவலாம் என்றும் கூறிய அவர், மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும் தொற்றாளர்கள் கணிசமான அளவு இனங்காணப்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உஸ்பெகிஸ்தான் பெண் பாலியலுக்கு விற்பனை

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி பெண் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு, பின்னர் பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறினார்.

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பினூடாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட நபரின் மனைவியும் மற்றுமோர் உஸ்பெகிஸ்தான் நாட்டுப் பெண் எனத் தெரிவித்த ஊடகப்பேச்சாளர், இதனை போன்றதொரு குற்றச் சம்பவத்தில் அந்தப் பெண், ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டு, தற்போது இலங்கைச் சிறையில் உள்ளார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையிலும் வெளிநாட்டில் இருந்தும் பெண்களை அழைத்துவந்து பாலியல் நடவடிக்கை மற்றும் விபசாரத்தில் ஈடுபடுவது 1995 மற்றும் 2006ஆம் ஆண்டு இலங்கை தண்டனை சட்டக்கோவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய குற்றச்செயலாகும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோரை 10 வருடங்கள் முதல் 20 வருடங்கள் சிறையிலடைக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மேற்படி உஸ்பெகிஸ்தான் பெண்ணை பாலியல் நடவடிக்கைக்கு விற்பனை செய்ய ஆதரவளித்த நபர்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்திய அறிக்கையில் வெளியாகிய அதிர்ச்சி

கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரியவின் முன்னிலையில், பொரளை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வைத்திய பரிசோதனை அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு தடயவியல் மருத்துவர் எம்.எஸ் ராஹூல் ஹக்வின் கையொப்பத்துடன் இவ்வறிக்கை, பொரளை பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இறந்த சிறுமி, தாக்கப்படவில்லை. சித்திரவதை செய்யப்படவில்லை. எனினும், எரிகாயங்களால், உடல் 72 சதவீதம் எரிந்துள்ளதென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சிறுமி கர்ப்பமடையாது, நேரம் கிடைக்காத போதெல்லாம் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயினால் உடலின் மேல் பகுதியில் ஏற்பட்ட எரிகாயங்களில் கிருமிகள் தொற்றியமையால், ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாகவே இச்சிறுமி மரணமடைந்துள்ளார் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிஷாட்டின் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

சிறுமியின் மரணத்துடன் தொடர்புடைய சகலரும் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அதேவேளை, சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக அரசாங்கம் சட்டங்களை வலுப்படுத்த வேண்டும் எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது " சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பது, அமைச்சராக இருந்த ரிஷாட் பதியூதீனுக்கு தெரியாதா?" என ஆனந்தகுமார் கேள்வி எழுப்பினார்.

'மெழுகுவர்த்தி ஏற்றுங்கள்'

உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அச்சிறுமியின் ஆத்மா சாந்தி அடைய எதிர்வரும் வியாழக்கிழமை டயகமைக்கு நாம் நேரடியாக சென்று நினைவேந்தல் நிகழ்வொன்றை நடத்தவுள்ளதாகவும், அன்றைய தினம் மலையக உறவுகள் தத்தமது வீடுகளில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இனிவரும் காலங்களில் மலையக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை, 18 வயது குறைந்தவர்களாயின் அவர்களை வீட்டு வேலைகளுக்கு அனுப்பக்கூடாது என வலியுறுத்துவதாகவும் கூறினார்.

மேலும், இதற்கு மாற்று நடவடிக்கையாக தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஊடாகவும் , பிரஜாசக்தி நிலையத்தின் ஊடாகவும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

TKNewspaper

பா.நிரோஸ்

'கம்மன்பிலவின் வீட்டை அலி சப்ரியின் சகோதரர் திருத்துகிறார்'

அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு சொந்தமான, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவின் இல்லத்தை, ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில், சி.பி.எஸ்.டி.எல் நிறுவனம் திருத்தியமைப்பதாகத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இந்நிறுவனத்தின் தலைவராக நீதி அமைச்சர் அலி சப்ரியின் சகோதரர் இருப்பதாகவும் தெரிவித்தார்.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கிய மக்கள் சக்தியினரால் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஊடகங்களுக்காகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை என்றார்.

அரசாங்கத்தின் பிரதான அணியாள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவ செயற்பாடுகளை, நிதி அமைச்சர் பசிலே முன்னெடுக்கிறார். பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் ஏனைய கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

மந்திரக் கதைகள் கூறப்படுவதுபோல, உதய கம்மன்பிலவின் உயிர் தற்போது கிளியிடம் இருக்கிறது. அந்த கிளி அண்மையில் பாராளுமன்றத்துக்கு வந்தது. எரிபொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்துக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டன. பலர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தனர். இப்பிரச்சினைகள் அரசாங்கத்துக்குள் வளர்ந்து வந்த நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. இதுவொரு முட்டாள்தனமான தீர்மானம் எனவும் கடுமையாக சாடினார்.

வலுசக்தி அமைச்சரின் உத்தியோகப்பூர்வ இல்லம் அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு சொந்தமாக இருக்கிற போதிலும், இந்த இல்லத்தை திருத்தும் பணிகள் சி.பி.எஸ்.டி.எல் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரியின் சகோதரரே இந்நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாக ஆளுந்தரப்பினர் கூறுகின்றனர். இவ்வாறான நிலையில், கோடியே 50 இலட்சம் செலவில் இதனை திருத்த வேண்டுமா? எனவும் அவர் வினவினார்.

இஷாலியின் மர்ம மரணம்;

'விரைவில் நடவடிக்கை'

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து வந்த நிலையில், மர்மமான முறையில் தீக்காயங்களுக்கு உள்ளாகி, உயிரிழந்த சிறுமியான இஷாலினி மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இச்சம்பவம் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற நேற்றைய அமர்வின்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் இச்சம்பவம் தொடர்பில் சபையிலிருந்த சரத் வீரசேகரவிடம் இதுதொடர்பில் வினவியமைக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், உயிரிழந்துள்ள 16 வயதுடைய சிறுமி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட்டின் வீட்டிலேயே பணிபுரிந்து வந்துள்ளார். தீக்காயங்கள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், உயிரிழந்துள்ளார். இவர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகப்படுத்தப்பட்டிருப்பது சட்ட வைத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்கும் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

'இதுவொரு அரசியல் பிரேரணை'

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஒரு அரசியல் பிரேரணை என தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் கம்மன்பில மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இல்லை என்கிற நிலையில், இது கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடிப்படையற்றவகையில், நம்பிக்கையில்லாப் பிரேரணை எப்படியும் தோற்கடிக்கப்படுமென்பதை அறிந்து கொண்டே எதிர்க்கட்சி இதனை கொண்டுவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உபகுழுவே எரிபொருள்களின் விலையை அதிகரிக்க தீர்மானித்திருந்தது. இந்த தீர்மானத்தை அமைச்சர் கம்மன்பில அறிவித்தார். எனவே, கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அடிப்படையற்றது எனவும் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சிக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை. எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படுமாக இருந்தால் மக்களின் வாழ்க்கை செலவும் அதிகரிக்கும். இதற்கான நிவாரணங்களையும் அரசாங்கம் வழங்கியுள்ளது எனவும் தெரிவித்தார்.

'கம்மன்பிலவை பதவி விலக்குவதற்கான

'காரணங்கள் இல்லை'

ஐக்கிய மக்கள் சக்தியினரால் அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்ப ட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வாக்களிக்குமென தெரிவித்த அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன, கம்மன்பிலவை பதவி விலக்குவதற்கான எந்தவிதமானக் காரணங்களும் இதில் இல்லை எனவும் தெரிவித்தார்.

வலு சக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இரண்டாவது நாள் விவாத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எல்லா அரசாங்கத்தின் காலத்திலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ள காரணங்களைப் பார்க்கும்போது, கம்மன்பிலவை பதவியிலிருந்து நீக்குவதற்கான பொறுத்தமான எந்தவொரு காரணங்களும் அதில் இல்லை எனவும் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடைக்குடைய பிரேரணை அல்ல. இதனைக் கொண்டு அரசாங்கத்தைத் தோற்கடிக்கவும் முடியாது. இப்பிரேரணை ஊடாக அரசாங்கத்தை விமர்சிக்கக் கூடிய வாய்ப்பு எதிர்க்கட்சியினருக்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு, கடந்த 40 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களின் செயற்பாடுகளே காரணம். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் உரப் பிரச்சினை, தடுப்பூசிகளை செலுத்துவதில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க பொருளாதாரப் பிரச்சினைகளே காரணம் எனவும் தெரிவித்தார்.

'பிரேமதாஸவைப்போல சஜித்தையும் தோற்கடிப்போம்'

1972ஆம் ஆண்டு மே மாதத்தில் முன்னாள் ரணசிங்க பிரேமதாஸவால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டதோ, அதேபோல அவரது மகன் சஜித் பிரேமதாஸவால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையும் தோற்கடிக்கப்படும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வலு சக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இரண்டாவது நாள் விவாத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 73 வருடங்களில், 48 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒன்றரை வருடங்களுக்கு ஒருமுறை நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் 23 பேருக்கு எதிராகவும், அரசாங்கங்களுக்கு எதிராக 23 தடவைகளும், பிரதமர்களுக்கு எதிராக இரு தடவைகளும் இதுவரையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் முதற் தடவையாக வலு சக்தி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் அமைச்சர் கம்மன்பில சந்தோஷப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்திய பாராளுமன்றத்துக்கு 76 வயதாகிறது. எனினும் அங்கு வெறும் 28 நம்பிக்கையில்லாப் பிரேரணைகளே இதுவரையில் கொண்டுவரப்பட்டுள்ளன. 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையில் ஒரேயொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையே கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். உலகில் அதிகளவான தடவைகள் இலங்கையின் அரசமைப்பே திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக எவ்வளவு காலம் நாசம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்த அவர், உயர்தர பரீட்சையில் நாட்டில் முதலிடம் பிடித்த நபருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தின்போது தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த மீலேச்சத்தனமான கொடூரத்திலிருந்து இலங்கையால் இன்னும் மீள முடியாதுள்ளது. இந்நிலையில், இந்த ஜூலை மாதத்தை வேறு நோக்கங்களுக்காக எதிர்க்கட்சி பயன்படுத்தப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

'எரிபொருள்களின் விலை தீர்மானம் தற்காலிமானது'

அமைச்சரவையும் துறைசார் அமைச்சரும் இணைந்தே எரிபொருள்களின் விலையை அதிகரிக்க தீர்மானித்ததாகவும், இந்தத் தீர்மானம் தற்காலிமானது என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எமது நாட்டில் அமையப்பெற்றிருந்த ஒவ்வொரு அரசாங்கங்களும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன. 2005ஆம் ஆண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்றுக்கொண்ட போது 80இற்கும் குறைவான அமைச்சர்களே இருந்தனர். என்றாலும் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்டவர்களை இணைத்துக்கொண்டு அரசாங்கமொன்றை அமைத்ததுடன், விடுதலைப் புலிகளையும் தோற்கடித்திருந்தார்.

யுத்தத்தின் பின்னர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கையெடுத்ததுடன், மறை பொருளாதார வளர்ச்சியை நேர் வளர்ச்சியாக்கினார். நாட்டில் வேலைவாய்ப்பின்மை சதவீதத்தையும் குறைத்திருந்தார். ஆசியாவில் மிகவும் வேகமாக அபிவிருத்தியடையும் நாடாகவும் இலங்கையை மாற்றினார்.

தொற்றுக் காலப்பகுதியில் அரசாட்சியை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. என்றாலும் இந்த சவால்களை நாம் எதிர்கொண்டுள்ளதுடன், பொருளாதாரத்தையும் பாதுகாத்துள்ளோம். உலகில் வேலைவாய்ப்புகள் பறிபோகும் சூழலில் நிறுவனங்களுடன் பேசி வேலைவாய்ப்புகளை பாதுகாக்க முடிந்துள்ளது. அந்நிய செலாவணியை பாதுகாத்துள்ளோம். அதேபோன்று கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

இவை அனைத்து சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் 10 அபிவிருத்தி திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

கூட்டணி அரசாங்கத்தில் பல்வேறு கொள்கைகளை பின்பற்றும் நபர்கள் இருக்கின்றனர். பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. அதேபோன்று கட்சிகளுக்கும் தனிப்பட்ட கருத்துகள் இருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

நெல், அரிசியின் விலையை

'அரசாங்கமே தீர்மானிக்கும்'

எதிர்வரும் போகத்திலிருந்து நெல் மற்றும் அரிசியின் விலையை அரசாங்கமே தீர்மானிக்கும் என தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அரசியின் விலையை தனிநபர் ஒருவர் தீர்மானிக்க இடமளிக்கப்படாதெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்வின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எதிர்வரும் இரண்டு வாரங்களில் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் அரசாங்கம் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடவுள்ளது. இதுதொடர்பில் வர்த்தக அமைச்சும் விவசாய அமைச்சும் இணைந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது.

எதிர்வரும் போகத்தில் 50 - 52 ரூபாய்க்கே நெல்லை கொள்வனவு செய்யவுள்ளோம். அனைத்து அரிசி ஆலை உரிமையாளர்களும் இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர் எனவும் தெரிவித்த அவர், இதன்பின்னர் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியாது என்றார்.

2500 ரூபாவாக இருந்த தண்டப்பணத்தை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளோம். ஆகவே, அதிக விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டாலும், அரிசியை அதிகவிலைக்கு விற்பனை செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

சிறுவிளம்பரங்கள்

புதிய வேலைத்திட்டமொன்றுக்காக, 2007 அல்லது அதற்குப் பின்னரான double cabs வாகனம் மன்னார், வவுனியா, பதுளை, கிளிநொச்சி, நுவரெலியா, மாத்தளை, காலி, கேகாலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கண்டி மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களிலிருந்து சாரதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்புகளுக்கு-077191 9200 முறையாக கட்டணம் செலுத்தப்படும்.

டைல் பதிப்போர் மற்றும் மேசன்கள் தேவை, சம்பளம் ரூபாய் 70,000 க்கு மேல், மேலதிக கொடுப்பன உண்டு. தொடர்புகளுக்கு 0783307979, 0760095539.

கொழும்பு 02, இல் அமைந்திருக்கும். CLEARING and FORWARDING cokகு வெற்றிடங்கள் உள்ளன. WHARE CLEARK WITH 05 YEAR EXPERIENCE WITH CHA RUP 'A' PASS, ACCOUNTS EXECUTIVE WITH YERS EXPERIENCE AGE BELOW 35, HEAVY VEHICLE DRIVER WITH MAHAPOLA CERITFICATE HEAVY VEHICLY MACHANIC. தொடர்புக்கு: 0777715441 murali@monomilines.com

Lk Newspapers

கிழக்கு மாகாணத்திலுள்ள

11 விளையாட்டு மைதானங்களுக்கு ரூ.55 மில்லியன் நிதியொதுக்கீடு

■ ஏ.எச்.ஏபரீட்

கிழக்கு மாகாணத்தில் உள்ள 11 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 55 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி, ஒரு மைதானத்தின் அபிவிருத்துக்கு தலா 5 மில்லியன் ரூபாய் வீதம் செலவு செய்யப்படவுள்ளது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மூலம் இவ்வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை உடன் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்யுமாறு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு நிதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, அம்பாறை, தமண அலஹேன விளையாட்டு மைதானம், சம்மாந்துறை, நாவிதன்வெளி பொது விளையாட்டு மைதானம், பொத்துவில், லாஹுகல பிரதேச சபை பொது விளையாட்டு மைதானம், கல்முனை, பொலிவேரியன் விளையாட்டு மைதானம், கல்குடா, பேத்தாளை பொது விளையாட்டு மைதானம் ஆகிய விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மேலும், மட்டக்களப்பு, வேலூர் சக்தி பொது விளையாட்டு மைதானம், பட்டிருப்பு, முனைக்காடு பொது விளையாட்டு மைதானம், சேருவில, சேருவில பொது விளையாட்டு மைதானம், திருகோணமலை, அபயபுர பொது விளையாட்டு மைதானம், மூதூர், மூதூர் பொது விளையாட்டு மைதானம், மூதூர், கிண்ணியா பொது விளையாட்டு மைதானம் ஆகிய விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச சபை

அமர்வில் அமளிதுமளி

■ என்.ராஜ். எம்.தோஷாந்த்

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கு, காரைமுனங்கு மயானத்தில் உக்காத கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பான விவாதத்தின் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி உறுப்பினர்களிடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதனால், சபையில் அமைதியின்மை நிலவியது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம், தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில், நேற்று (20) நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கு, காரைமுனங்கு மயானத்தில் உக்காத கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு இடையே கருத்து மோதல் இடம்பெற்றதன் காரணமாக, சபையில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் செ.சிவலோசன் இவ்விடயம் தொடர்பில் உரையாற்றும்போது, குறித்த மயானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே, உக்கக் கூடிய கழிவுகளை, மயான பகுதியை உயர்த்தும் முகமாகவே, சபையால் கொட்டப்பட்டதென்றார்.

எனினும், நல்லூர் பிரதேச சபையை சேர்ந்த சில கட்சிகளின் உறுப்பினர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அந்த இடத்துக்குச் சென்று, மக்களை குழப்பி போராட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்த அவர், கடந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் நல்லூர் பிரதேச சபையினரால் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில், அரியாலையில் நாய் சரணாலயம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், அந்த நாய் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பற்றி கதைக்காத நபர்கள், தற்பொழுது மக்களைத் தூண்டிவிட்டு அரசியல் செய்ய முனைகிறார்கள் எனக் குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர், தாம் அவ்வாறான கீழ்த்தரமான செயற்பாட்டில் ஈடுபடுவது இல்லை எனவும் ஒரு சில கட்சிகளின் உறுப்பினர்கள் அவ்வாறு இருந்தாலும் தாங்கள் அவ்வாறு அரசியல் செய்யவில்லை எனவும் தெரிவித்தார். இதையடுத்து, சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

கல்முனைக்கு தடுப்பூசி வருகிறது

சனிக்கிழமை முதல் வழங்க நடவடிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா, வி.ரி.சகாதேவராஜா

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் எதிர்வரும் சனிக்கிழமை (24) முதல் கொவிட்-19 முதலாவது தடுப்பூசி செலுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (20) தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் நீண்டநாள் நோயாளிகள், முதியோர் இல்லங்களில் வசிப்பவர்கள், வைத்தியசாலை, சுகாதார நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தடுப்பூசிகளை, அருகாமையிலுள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம், சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ள தடுப்பு மருந்து வழங்கும் இடங்களுக்குச் சென்று ஏற்றிக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

அத்துடன், சுகாதார வைத்தியதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவகர்கள் ஆகியோருடன் தொடர்புகொண்டு, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவித்தார்.

இவ்வாரம் நீண்ட விடுமுறைகள் உள்ளமையால், பொதுமக்கள் கணிசமாக ஒன்றுகூடுவதைத் தவிர்த்து, சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

தடுப்பூசி செலுத்துதல்

■ எஸ்.ஜொனேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி பயிலுநர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (20) காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகவும் அதேநேரம் மன்னார் மாவட்டக் கல்வி வலயங்களில் கல்வி கற்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வீதியோரத்தில்...

திருகோணமலை – கொழும்பு வீதியில் கந்தளாய், அனோமா சந்திப் பகுதியில் நெல் உலர வைப்பதைப் படங்களில் காணலாம்.
கந்தளாய் பிரதேசத்தில் நெல் உலர வைப்பதற்கான பொதுவானதோர் இடமின்மையால் இவ்வாறு பிரதான வீதியில் உலர வைப்பதாகத் தெரிவிக்கும் விவசாயிகள், இதற்கான இடத்தை ஒதுக்கி, தமக்கு உதவ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர்.
(படங்கள்: எப். முபாரக்)

ஓட்டோக்களில் கஞ்சா கடத்தல்

இருவர் கைது

■ கனகராசா சரவணன், பாறுக் ஷிஹான்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இருவேறு இடங்களில், இரு ஒட்டோக்களில் கேரளா கஞ்சா போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில், இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் கஞ்சா போதைப்பொருளை விற்பனைக்காக ஒட்டோவில் எடுத்துச் சென்ற ஒருவரை, 1 கிலோ கிராம் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் (19) இரவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

“மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இருவேறு இடங்களில், இரு ஒட்டோக்களில் கேரளா கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில், இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு கிலோ கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டு உள்ளது

சந்தேகநபரிடமிருந்து கேரளா கஞ்சா, ஒட்டோ இதன்போது கைப்பற்றப்பட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கேரளா கஞ்சாவை ஒட்டோவில் கடத்திச் சென்ற பிறிதொரு நபரை, சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட பிரிவின் தகவலுக்கமைய, காரைதீவு சந்திப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய இச்சந்தேக நபரிடமிருந்தும் 1 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீருவிலில்

13 பேருக்கு தொற்று

■ என்.ராஜ். எம்.தோஷாந்த்

வல்வெட்டித்துறை, தீருவில் கிராம அலுவலகர் பிரிவில், 13 பேருக்கு கோரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், தீருவில் கிராமத்தில், நேற்று முன்தினம் (19), எழுமாறாக 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 13 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாவலடி, தீருவில் ஆகிய கிராமங்களிலும் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர்

கொரோனா தொற்றால் உயிரிழப்பு

■ எம்.தோஷாந்த்

யாழ்ப்பாணத்தில், மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால், நேற்று முன்தினம் (19) உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நீரிழிவு நோயாளரான 84 வயதுடைய ஒருவரும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 78 வயதுடைய ஒருவருமே, இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 115 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கிராம அலுவலரை

தாக்கியவருக்கு விளக்கமறியல்

■ க. அகரன்

வவுனியா, தாண்டிக்குளம் கிராம அலுவலரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தி, அவர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபரை, 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாண்டிக்குளம் பகுதியில், கடந்த வாரம், கண்டி வீதி -ரயில் வீதிக் கரையில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த விற்பனை நிலையங்கள், வவுனியா பிரதேச செயலாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்நிலையில் அப்பகுதியில் தாண்டிக்குளம் கிராம அலுவலகரும் தனது கடமைகளை பிரதேச செயலாளருடன் இணைந்து மேற்கொண்டிருந்தார்.

இதனை அவதானித்த சட்டவிரோதமாக விற்பனை நிலையம் அமைத்த நபர் ஒருவர், குறித்த கிராம அலுவலகரை மகாறம்பைக்குளம் பகுதியில் வைத்து வழிமறித்து, அவருடன் முரண்பட்டு தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்த, சந்தேக நபர் தலைமறைவாகி இருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார்.

சட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்

■ எஸ்.எம்.நூர்தீன்

நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, சட்டத்தையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றுமாறு, தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோவில் நிர்வாகம் பக்தர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண ஊடக மன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, இவ்வாறு நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சின்ன கதிர்காமம் என்று சிறப்பித்து அழைக்கப்படும் தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோவில் வருடாந்த திருவிழா, கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, திருவிழாக்கள் நடைபெற்றுவரும் நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறுகின்றது.

இதனையொட்டி ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கோவில் நிர்வாகத்தினர் தெரிவிக்கையில்,

“சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு

அமைவாக, கோவில் நிர்வாக சபையினரை உள்ளடக்கிய 50 பேருடனே திருவிழாக்கள் நடைபெறுகின்றன. எமது கோவிலுக்கு பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வருவது வழமை. ஆனால், இவ்வாண்டு பக்தர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக கோவிலுக்கு வருகை தருவது தடைப்பட்டுள்ளது.

எனினும், இறுதிநாள் தீர்த்தோற்சவத்தை ஊடகங்கள் வாயிலாக நேரலையாகத் தருவதற்கு ஏற்பாடுகளை செய்துவருகிறோம். முருகப்பெருமானை வீட்டிலிருந்தவாறே நினைத்துக்கொண்டு, வீட்டிலேயே தீர்த்தமாடுமாறு பக்தர்களை அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்” என்றனர்.

வவுனியாவில்

டெங்கு பரவும் அபாயம்

■ க. அகரன்

வவுனியாவில், மழையுடனான வானிலை தொடர்கின்ற நிலையில், டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் தமது இருப்பிடங்கள், சுற்றாடல் பகுதிகளை சுத்தம் செய்து, டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அழிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, சுகாதார பகுதியால் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

மேல் மாகாணத்தில் டெங்கு நுளம்புத் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. இங்கிருந்தும் பல்வேறு தேவைகளுக்காக மேல் மாகாணங்களுக்குச் சென்று வருபவர்களும் அவதானமாகச் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கான அறிகுறிகள் டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுக்கு ஒத்தவையாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று நீர்வெட்டு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி நீர் வழங்கல் திட்டத்தினூடான நீர் வழங்கல், இன்று (21) காலை 6 மணி முதல் 24 மணித்தியாலங்கள் தடைப்பட்டிருக்கும் என, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி நீர் தாங்கி, கிளிநொச்சி நீர் தாங்கியுடன் இணைப்பதற்கான வேலைத்திட்டம், இன்று (21) காலை 6 மணிமுதல் நாளைமறுநாள் (22) காலை 6 மணிவரை நடைபெறவுள்ளது. இதனால், இந்த நீர் வழங்கல் திட்டத்தினூடான நீர் வழங்கல் 24 மணித்தியாலங்கள் தடைப்பட்டிருக்கும்.

UK Newspapers

ஆங்காங்கே வீசப்படும் முகக் கவசங்களால்

ஹட்டனில் சுகாதார அச்சுறுத்தல்

சுதத்.எச்.எம்.ஹேவா

பயன்படுத்திய முகக் கவசங்கள், ஹட்டன் நகரில் ஆங்காங்கே வீசப்படுவதால், பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதென, ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

கொரோனா வைரஸ் தொற்றின் பரவலுக்கு மத்தியில், ஹட்டன் நகரில் வசிப்பவர்களும் வெளியிலிருந்து நகரத்துக்கு வருபவர்களும் தமது முகக் கவசங்களை கழற்றி, ஆங்காங்கே வீசியெறியும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். இதனால், ஹட்டனில் தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அப்புறப்படுத்தப்படும் முகக் கவசங்களை ஆங்காங்கே வீசி எறிவதைத் தவிர்க்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நகரின் சுகாதாரப் பாதுகாப்பை நகர சபையாலோ அல்லது பொலிஸாராலோ மாத்திரம் உறுதிப்படுத்த முடியாது. இதற்கு பொதுமக்கள் சகலரினதும் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டயகம சிறுமியின் சம்பவமே

இறுதிப் படிப்பினையாகட்டும்

வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

மொஹொமட் ஆஸிக்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணி புரிந்த டயகம சிறுமிக்கு நடந்த கோரச் சம்பவம், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தல், சிறுவர் பாதுகாப்பின்மை என்பவற்றை, வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ள வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம், இச்சம்பவமே இறுதிப் படிப்பினையாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

கண்டியைத் தளமாகக்கொண்டு இயங்கும் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

குறித்த சங்கத்தின் தலைவர் சத்யவாணி சரசகோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில்

மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

இலங்கையில் சிறுவர் உழைப்பு, சிறுவர் துஷ்பிரயாகம் என்பவற்றுக்கு எதிராகக் கடுமையான சிறுவர் சட்டம் இருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் சிறுமியை வீட்டுவேலைக்கு அமர்த்தி இருப்பது முதலாவது குற்றமாகும்.

அது மட்டுமன்றி, இதனுடன் தொடர்புடையவர்கள் உடனடியாக சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதுடன், அச்சிறுமியின் குடும்பத்தாருக்கு கிடைக்கவேண்டிய நீதியை நிலைநாட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அத்துடன்,வீட்டு வேலைத் தொழிலுக்கான வயதெல்லை, கொடுப்பனவு, விடுமுறை, பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படுவதுடன், இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறாமல் இருப்பதற்கான பொறிமுறையையும் அரசாங்கம் உடனடியாக கொண்டு வர வேண்டும் என இச்சங்கத்தின் தலைவர் சத்யவாணி சரசகோபால் அறிக்கையின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

யுவதியைத் தேடும் பணிகள்

இரண்டாவது நாளாகவும் பலனளிக்கவில்லை

எஸ்.கணேசன்

திம்புளை, பத்தனை பொலிஸ் பகுதியில், 291 அடி ஆழமான டெவோன் நீர் வீழ்ச்சியில் விழுந்து காணாமற்போன, 19 வயது யுவதி, இதுவரை மீட்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (20) இரண்டாவது நாளாகவும் கடற்படை சுழியோடிகள், பொலிஸார், பிரதேசவாசிகள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்த தேடுதலின் போதும், யுவதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான்கு நண்பிகளுடன் கடந்த 18 ஆம் திகதி டெவோன் நீர் வீழ்ச்சியை பார்வையிட சென்ற போது, குறித்த யுவதி கால் தடுமாறி நீர்வீழ்ச்சியில் விழுந்தார்.

தலவாக்கலை, லிந்துலை லென்தோமஸ் தோட்டத்தில் வசித்த 19 வயதான எம்.பவிர்ரா என்ற யுவதியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன யுவதியைத் தேடும் பணிகள் நேற்று முன்தினம் (19) முன்னெடுக்கப்பட்ட நிலையில், அந்தப் பணிகள் இடை நடுவில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நீர் வீழ்ச்சியின் அடிவாரத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையும் பலனின்றி முடிந்துள்ளது.

விசேட தேவையுடைய

சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

இராகலையில் சம்பவம்

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மந்திரிதன்ன பிரதேச பண்டிதாகும்புர கிராமத்தில், 13 வயது சிறுமி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தொடர்பில், அவரது பெற்றோரால், இராகலை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (19) இரவு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி விசேட தேவையுடையவர் என்றும், இவர் தற்போது வைத்திய சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் சிறுமி விசேட தேவையுடையவராக இருப்பதால், அவரிடம் முறையான விசாரணைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக தெரிவித்துள்ள இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயந்த சமரக்கோன், விசேட பொலிஸ் குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

“ சிறுமி விசேட தேவையுடையவராக இருப்பதால், அவரிடம் முறையான விசாரணைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்

சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர், பண்டித்தாகும்புர பிரதேச விகாரையின் பிக்குவிடம் தெரிவித்துள்ள நிலையில், பிக்குவின் ஆலோசனைக்கமையவே, பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

ஜெயக்குமார் ஷான், பாலித ஆரியவன்ஸ

பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த வாரம் தொடக்கம் நாட்டின் பல இடங்களிலும் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் நேற்றும் (20) பதுளை, மாத்தளை ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன. பதுளையில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், அபிவிருத்தி அதிகாரிகள் சேவை சங்கம், மாத்தளையில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், அதிபர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வாழ்வாதாரம் பாதிப்பு; பெரண்டினா நிதியுதவி

கன்.ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய பிரதேச செலயகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொரோனா வைரஸ் தொற்றால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, பெரண்டினா அமைப்பின், கேகாலை மாவட்ட சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் சந்தன குமாரஜயலத் தலைமையில், நிதியுதவி வழங்கப்பட்டது.

இதற்கமைய, 171 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்காக 352,260 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்பாளர் சந்தன குமாரஜயலத் தெரிவித்தார்.

பாடசாலை சேவை

வாகன உரிமையாளர்கள் திண்டாட்டம்

ஆ.ரமேஸ்

கொரோனா வைரஸ் தொற்றால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், பாடசாலைகளுக்கான போக்குவரத்துச் சேவைகளை முன்னெடுத்த பாடசாலை சேவை வாகன உரிமையாளர்கள், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

பாடசாலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த நுவரெலியா, இராகலை, தலவாக்கலை உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த 100க்கும் அதிகமான தனியார் வாகன உரிமையாளர்கள், தமது வாகனங்களுக்கான மாதாந்த கடனை, நிறுவனங்களுக்கு செலுத்த முடியாத கடன் சுமைக்கு ஆளாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

குடும்ப வருமானமும் பாதிக்கப்பட்டுள்ள இவர்களது, வாழ்வாதார குறைப்பாட்டை நிவர்த்திக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரவுன்ஸ்வீக் தொழிலாளர்கள்

ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்

கே.சுந்தரலிங்கம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, மஸ்கெலியா, பிரவுன்சிக் தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (20) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத்தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு முறையாகக் கிடைக்காமை, வேலை நாள் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்டத்தின் கோவிலுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டகாரர்கள், 'தோட்ட சுரண்டலை உடன் நிறுத்து', 'கூட்டு ஒப்பந்தத்தினை புதுப்பிக்கவும்', 'அதிகாரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா பழிவாங்கலை உடன் நிறுத்து', 'தொழிற்சங்க முறியடிப்பை உடன் நிறுத்து' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய, நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி சுமார் 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

தனது கண்களையும் காதுகளையும் தானே குத்துவது ஆபத்தானது

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகம் என்ற தூணைத் துருப்பிடிக்க வைத்துப் பெயர்த்தெடுக்கும் முயற்சிகள் மீண்டும் முடுக்கிவிடப்பட்டுள்ளனவா என்ற அச்சம் மீண்டும் கிலிக்கொள்ளச் செய்துள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக, நாட்டில் இடம்பெற்றுவரும் தொடர் நடவடிக்கைகளே இந்த அச்சத்துக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. அதில், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் சிலர், பொலிஸ் நிலையங்களுக்கும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கும் அழைக்கப்பட்டு, அவர்களின் ஊடகத்துறை செயற்பாடுகள் பற்றிய தகவல்கள், தனிப்பட்ட விவரங்கள், தகவல் மூலங்கள் ஆகியவற்றை வழங்குமாறு, விசாரணை எனும் போர்வையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய அழுத்தங்கள் தொடர்பில், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஜனாதிபதிக்கும், சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் மீடியா போரம், இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகிய ஆறு அமைப்புகள் ஒன்றிணைந்து பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்தனவுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

வடக்கு - கிழக்கில் அதிகரித்துவரும் பௌத்தமயமாக்கல், நில ஆக்கிரமிப்புகள், இராணுவமயமாக்கல், மனித உரிமைகள் மீறல், அத்துமீறிய கைதுகள், ஊழல்மோசடிகள், இயற்கை வளம் சுரண்டல், சுற்றுச் சூழல் அழிப்பு உள்ளிட்டவை தொடர்பிலான செய்திகளை, ஊருவி வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் மீதே, இத்தகைய அச்சுறுத்தும் பாணியிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ன.

ஏற்கெனவே துல்லியமாகத் திட்டமிடப்பட்டு, மிகச்சூட்சுமமாக வடக்கு-கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படும் சிங்கள-பௌத்த விஸ்தரிப்புவாதத்தின் வேகத்தை ஒரளவுக்கு கட்டுப்படுத்தும் ஆற்றல், அங்குள்ள ஊடகவியலாளர்களிடம் காணப்படுகின்றது. அவர்கள் அத்தகைய நடவடிக்கைகளை உலகுக்கு வெளிப்படுத்தி வந்தார்கள். அவர்களை, இவ்வாறு தொடர்விசாரணைகளுக்கு அழைப்பதன் மூலமும் மின்னஞ்சல், பேஸ்புக், வட்ஸ்அப் போன்றவற்றின் விவரங்களையும் அவற்றின் கடவுச்சொற்களையும் வங்கிக் கணக்குகள் தொடர்பான விவரங்களையும் வழங்குமாறு மிரட்டுவது, அவர்களது ஊடகப்பணிக்கு இடையூறையும் அச்சத்தையும் ஊட்டும் முயற்சிகளாகவே காணப்படுகின்றன.

பத்திரிகாதர்மத்தின் அடிப்படையில் தமது தகவல் மூலத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் எவருக்கும் வழங்கக் கூடாது; வழங்குமாறு எவரும் கட்டாயப்படுத்தவும் முடியாது. அதற்கு சட்டமும் இடம்கொடுக்கவில்லை.

அவ்வாறிருக்கையில், ஊடகவியலாளர்களை குற்றவாளிகளைக் கையாள்வதுபோன்று, மிரட்டி விசாரித்தல் என்பது, கருத்துச்சுதந்திரம் எந்தளவுக்கு அச்சுறுத்தப்படுகின்றது என்பதற்கு, 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' ஆக அமைகின்றது.

நாட்டு மக்களின் மனநிலையை உள்வாங்கித் தரும் கண்களாகவும் காதுகளாகவும் ஊடகங்களைப் பார்க்க வேண்டிய அரச இயந்திரம், அவற்றை அடக்க முற்படுவது, மக்களாட்சிக்கு விரோதமான போக்கின் அப்பட்டமான பிரதிபலிப்பாகும். இத்தகைய போக்குத் தடுக்கப்பட்டால் மாத்திரமே, இந்த நாட்டில் ஜனநாயகம் வாழும்; இந்த நாடும் வாழும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



முதியோர் நிலைகளை

முதியோர்களின் நிலையை இளைய தலைமுறையினர் பெரிதாக அறிவதுமில்லை; உணர்வதுமில்லை.

வயது முதிர்ந்தால் அப்படித்தான் என்பது போல் நடப்பதுண்டு. எல்லோரும் அப்படியானவர்கள் அல்ல. ஒரு முதியவரும் மூதாட்டியும் அருகருகே இருந்தார்கள். அவர் எழுந்திருக்க முனையும் போது, அவரது வேஷ்டி தடுக்கி விட, அவர் நிலைத்தடுமாறினார். ஆனால் எழுந்துவிட்டார்.

அப்போது அருகிலிருந்த மூதாட்டி பதைபதைத்தார். எனினும் அவர் எழுந்து நின்றதும் அவரை வணங்கி, "கவனமாக நடவுங்கள்" என்றார். இந்த மனப்பான்மை பல இளைஞர்களிடமும் காணப்படுகின்றது.

வயோதிபர்களின் தேகநிலை, அசைவு, ஆற்றாமை என்பனவற்றை அவர்களை ஒத்த வயதினரே நன்கு புரிவார்கள். இளமை, முதுமை என்பன, கால நகர்வின் கட்டாய நிகழ்வுகள். முதுமை நிலை கூட, ஒரு பேறு; அனுபவத் தொகுப்பின் உருவம்.

-பருத்தியூர் பாலு. வீரவாகுதன்

கறுப்பு ஜூலையும் இன்றைய நிலைமையும்

எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்தை எதிர்த்து, ஆசிரியர் தொழிற்சங்கங்களும் அனைத்துப்பல்கலைகழக மாணவர் ஒன்றியமும் இணைந்து, கடந்த எட்டாம் திகதி பாராளுமன்ற சந்தியில் ஆர்ப்பாட்டம் நடத்தின.

இதையடுத்து, ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்களை, பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றம் அவர்களைப் பிணையில் விடுதலை செய்ததன் பின்னர், பொலிஸார் அவர்களைத் தனிமைப்படுத்துவதற்காகப் பலாத்காரமாக அழைத்துச் சென்றனர்.

இந்தப் பின்னணியில், அடக்குமுறை, விலைவாசி உயர்வு போன்ற நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளை முன்னிட்டு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர், கடந்த ஒன்பதாம் திகதி சுதந்திர சதுக்கத்தின் முன்னால் மௌன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, தமிழ் மொழியில் சுலோக அட்டைகள் இருக்கவில்லை. இதற்கு, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனும் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனும், எதிர்ப்புத் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இதையடுத்து, கடந்த 17 ஆம் திகதி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற சபாநாயகருமான கரு ஜயசூரிய, ஜனநாயகத்தைப் பாதுகாப்பது தொடர்பாகக் கலந்துரையாட, சகல எதிர்க்கட்சிகளையும் அழைத்து இருந்தார். அக்கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளைத் தவிர, ஏனைய சகல எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில், நான்கு முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தல்; பொருளாதார முன்னேற்றம்; மனித உரிமைகளை நிலைநாட்டல்; நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாத்தல் ஆகியன நான்கு விடயங்களும் வலியுறுத்தப்பட்டு இருந்தன.

கூட்டத்தில் உரையாற்றிய சுமந்திரன், இவ்வாறு வலியுறுத்தப்பட்ட நான்கு விடயங்களில், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல் உள்ளடக்கப்படவில்லை எனக் கூட்டத்தின் அமைப்பாளர்களை விமர்சித்தார். மனோ கணேசனும் அதே கருத்தைத் தெரிவித்தார்.

இந்த வாரம், சிங்கள அரசியல்வாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் வெவ்வேறு அரசியல் கோணங்களில், 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடளாவிய ரீதியில், தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலைகளையும், ஏனைய வன்செயல்களையும் நினைவு கூர்கின்றனர். அந்தக் கொடுமைக்கு, 38 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், நாட்டில் அரசியல் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை, இந்த இரு சம்பவங்களும் மிக அருமையாக எடுத்துரைக்கின்றன.

2000 ஆம் ஆண்டு, இனப்பிரச்சினையின் வரலாற்றில் முக்கிய மைல்கல்லாகும். அந்த ஆண்டின் இறுதியில், இரு பிரதான கட்சிகளும் தற்காலிகமாகவேனும் இனவாதத்தை அரசியல் கருவியாகப் பாவிப்பதை நிறுத்திக் கொண்டன. அதேபோல், தமிழ் அரசியலிலும் பாரியதொரு மாற்றம் ஏற்பட்டது. 'துரோகிகள்' என, ஏனைய தமிழ்க் கட்சிகளை அழைத்த புலிகள், அக்கட்சிகளை அரவணைத்துச் செல்ல முன்வந்தது. அந்தத் தமிழ் கட்சிகளும், புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி என்று ஏற்றுக் கொண்டன.

2000ஆம் ஆண்டு வரை, நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக மாறி மாறி இனவாதத்தைத் தூண்டி, தமிழர்களுக்கு சிறிதளவேனும் உரிமைகளை வழங்க அரசாங்கங்கள் எடுத்த முயற்சியைத் தடுத்தன. ஆனால், 2000ஆம் ஆண்டு இறுதியில், இந்த நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதற்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா, நோர்வே மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எடுத்த முயற்சியை, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கவில்லை.

அதையடுத்து, அரசியலமைப்பின் படி, பாதுகாப்புத்துறை ஜனாதிபதியின் கீழ் இருக்க வேண்டிய விடயமாக இருந்தும், அதை ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவரிடம் வழங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கினார். அதேபோல், ஐ.தே.க அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் அவர் எதிர்க்கவில்லை.

ரவி கருணாநாயக்க போன்ற ஐ.தே.க தலைவர்கள், சந்திரிகாவை தனிப்பட்ட முறையில் ஆத்திரமூட்டியதை அடுத்தே, அவர் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐ.தே.க அரசாங்கத்தைக் கலைத்தார்.

சந்திரிகாவின் காலத்துக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் காலத்திலிருந்தே, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி இனவாதத்தை மிக மோசமாகப் பாவித்து வருகிறது. எவ்வாறாயினும் 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஐ.தே.கவும் அதிலிருந்து பிரிந்த ஐக்கிய மக்கள் சக்தியும் இனவாதத்தை அரசியல் கருவியாகப் பாவிக்கவில்லை.

அவ்விரு கட்சிகளும், இனவாதத்தை அரசியல் கருவியாகப் பாவிக்காவிட்டாலும் அக்கட்சிகளும் இனங்களுக்கும் மதங்களுக்கும் அப்பாற்பட்ட கண்ணோட்டத்தைக் கொண்டு இருப்பதாகவோ, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் மீது, அக்கறை கொண்டவை என்றோ கூற முடியாது. ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களும் அதையே எடுத்துரைக்கின்றன.

இனப்பிரச்சினையின் ஒரு திருப்பு முனையாகிய, 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரங்கள் இடம்பெற்று 38 ஆண்டுகள் சென்றுவிட்ட நிலையிலும், நாட்டின் நிலைமை இதுவாகும்.

பெரும்பான்மைத் தலைவர்கள் மட்டுமன்றி, சிறுபான்மை அரசியல்வாதிகளிலும் பெரும்பாலானோர் இன்னமும் 1983ஆம் ஆண்டிலேயே வாழ்கின்றனர். 1983ஆம் ஆண்டளவில், உலகில் அமெரிக்கா தலைமையிலும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலும், இரண்டு பிரதான அரசியல் அணிகள் இருந்தன. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன, அமெரிக்க அணியையும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, சோவியத் ஒன்றியத்தையும் ஆதரித்தனர்.

இலங்கையில் தமிழ் இயக்கங்கள் சோஷலிஸத்தை ஆதரித்தன. அவற்றின் தலைவர்கள் முன்னாள் சோவியத் ஜனாதிபதியான ஜோசப் ஸ்டாலினின் வழியிலேயே சுயநிர்ணய உரிமையை விளக்கினர். ஜே. ஆரின் அமெரிக்க ஆதரவுக் கொள்கையால் ஆத்திரமடைந்து இருந்த இந்திராவுக்கு, தமிழ் இயக்கங்களுக்கு பணத்தால் ஆயுதத்தால் உதவிகள் வழங்கி, ஜே ஆரை அசௌகரியத்துக்கு உள்ளாக்க அந்த நிலைமை வசதியாகியது.

உண்மையிலேயே, அன்றும் இந்தியா இலங்கையில் தனித் தமிழ் நாடொன்று உருவாவதை விரும்பவில்லை. 1988 ஆம் ஆண்டு பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டின் போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ். கே சிங், "இலங்கையில் தனித் தமிழ் நாடொன்று உருவானால் அது, தமிழ் நாட்டிலும் பிரிவினைவாதத்தை மீண்டும் தூண்டிவிடும். எனவே, இலங்கையில் தனித் தமிழ் நாடொன்று உருவாவதற்கு இந்தியா இடமளிக்காது" என்று கூறியிருந்தார்.

அன்றைய பூகோள அரசியல் நிலைமை காரணமாக, இலங்கைக்கு எதிரான நடவடிக்கையாக மட்டுமே, தமிழ் இயக்கங்களுக்கு பணத்தாலும் ஆயுதத்தாலும் பயிற்சியாலும் இந்திரா உதவி வழங்கினார்.

1983ஆம் ஆண்டு ஜூலையில் உலகிலும் பிராந்தியத்திலும் இலங்கையிலும் இருந்த நிலைமை இன்று இல்லை. இன்று இந்தியா, அமெரிக்க அணியிலேயே இருக்கிறது. இன்றும் இலங்கை, இந்தியாவுக்கு எதிரான அணியொன்றை (சீன அணி) ஆதரித்த போதிலும் இந்தியா, இலங்கைக்கு எதிராகப் பழைய பிரிவினைவாத ஆயுதத்தைக் கையிலெடுக்கத் தயாராக இல்லை.

இதைத்தான் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயமென்றை மேற்கொண்டு இருந்தபோது, 1987ஆம் ஆண்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டதற்குப் பின்னர் நிலைமைகள் மாறியுள்ளன. (Much water has flowed under the bridge since 1987) என, ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனிடம் கூறியிருந்தார்.

"தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, புதிதாக உருவாகியுள்ள நிலைமைகளையும் சந்தர்ப்பங்களையும் பாவிக்க வேண்டும்" எனவும் அவர் அறிவுரை வழங்கி இருந்தார். "வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் விடயத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா உதவ வேண்டும்" என்று பிரேமசந்திரன் கூறிய போதே, அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று, தமிழ்த் தலைவர்கள் கூறும் போது, தமிழர்கள் எதைக் கேட்கிறார்கள் என்று வினவும் பலர், பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இனவாதிகள் அல்லர்; அதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று, தமிழர்கள் தனித் தமிழ் நாட்டையே கேட்கிறார்கள் என நினைப்போரும் உள்ளனர்.

அதாவது, 30 வருடத்துக்கு மேலாக ஆயுதப் போர் நடத்தி, பல்லாயிரக் கணக்கான உயிர்களைத் தியாகம் செய்து, தமிழர்கள் வழங்கிய செய்தி, போதியளவில் தெற்கே சென்றடையவில்லை என்பதே, இதன் யதார்த்தம் ஆகும். அந்த மக்களும், இன்னமும் 1983ஆம் ஆண்டில் நினைத்ததைப் போலவே நினைக்கிறார்கள்.

பெரும்பான்மையினத் தலைவர்களும் மாறவில்லை; பெரும்பான்மை மக்களது வாக்குகளால் பதவிக்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அவர்களும் விடுபடவில்லை.

தற்போது தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்று வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களும், இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களின் போது, தமிழ் மொழியையும் தமிழ் மக்களின் பிரச்சினையையும் மறந்து விட்டனர் என்றால், 30 ஆண்டு காலப் போருக்கு முன்னர் அதாவது, 1983ஆம் ஆண்டு இருந்த நிலையிலேயே அவர்களும் செயற்பட்டு வருகிறார்கள் என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது.

அவர்களை மட்டும் குறைகூறிப் பயனில்லை. இந்த நிலைமையைச் சீர்செய்ய தமிழ், முஸ்லிம் தலைவர்களிடம் என்ன உத்தி இருக்கிறது என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது.

கழிதங்கள்

மழையால் சிறுபோக வேளாண்மை பாதிப்பு

திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக வேளாண்மைச் செய்கையானது, அறுவடைக்குச் சில நாள்கள் இருக்கின்ற நிலையில், காற்றுடன் கூடிய மழையால் பயிர்கள் சாய்ந்து பாதிக்கப்பட்டு உள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு, நிலத்தோடு நிலமாகப் பயிர்கள் சாய்ந்துள்ளதால், அறக்கொட்டி (கபில நிறத்தத்தி) தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. நெற்செய்கைகளுக்கான பூச்சி மருந்துகள் தட்டுப்பாடான இன்றைய காலகட்டத்தில், இத்தகைய நிலைமையானது, அறுவடையின் போது மேலதிகமான செலவுகளை ஏற்படுத்தும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், தற்போது நெல்லின் விலை குறைவடைந்து, சந்தையில் ஒருவிதமான செயற்கையான தளம்பல் நிலை காணப்படுவதால், தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்க நேரிடலாம் எனவும் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றார்கள். எனவே, விவசாயிகளுக்கு கட்டுப்படியான வகையில் நெல்லின் விலையைப் பேணும்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கொரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

தீஷான் அஹமட்

Ekuruvi paper

தியாகத் திருநாளின் இலக்குகளை கொண்டாடுவோம்

அஷ்ஷெய்க் முஹம்மத் பகுஹுஸ்தீன்

யமிப் பந்தில் வாழும் முஸ்லிம்கள் கொண்டாடி மகிழ்வதற்காக எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா இரண்டு பெருநாள் தினங்களை வழங்கியுள்ளான். ஒன்று ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள்; அடுத்தது, ஈதுல் அழ்ஹா எனும் ஹஜ்ஜுப் பெருநாள். ஹஜ்ஜுப் பெருநாள் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாக வாழ்வை நினைவு கூரும் உன்னதமான நாளாகும்.

பெருநாள் தினங்கள், கொண்டாடி மகிழும் தினங்களாக இருந்தாலும் கூட, மனித நேய நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் தான், அவை விதியாக்கப்பட்டுள்ளன. அதற்கு பின்னால் பல சமூகநலன்கள் உள்ளன; அருள் நிறைந்த நோக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றை நோக்குவோம்.

பரஸ்பர சந்திப்பும் ஒன்று கூடலும்

இஸ்லாத்தின் பார்வையில் பெருநாள்தினம் என்பது மகிழ்ச்சியைக் கொண்டாடும் திருநாள். அன்றைய தினத்தில் முஸ்லிம்கள் பரஸ்பரம் வாழ்த்துகள் பரிமாறி, ஸலாம் கூறி, ஆரத்தழுவி, அன்பாகப் பேசிக் கதைத்து, அழகான வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒர் அரிய சந்திப்பு என்பதைப் புரிந்து கொள்ளலாம். அது உறவுகளைப் புதுப்பித்து உள்ளங்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு சங்கமம். பெருநாள் தினத்தின் பிரதான இலக்கும் நோக்கமும் இதுவே. கொரோனா தொற்றுப் பரவல் இருக்கும் இந்தக் காலத்தில், பரஸ்பரம் நேரடியாகச் சந்திப்பதைத் தவிர்ந்து, இலத்திரனியல் ஊடக வழியாக, இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளமுடியும். இடர்கால சூழலில் இதன் வடிவங்கள் மாறலாம்.

மகிழ்ச்சியைக் கொண்டுவருதல்

இரண்டு பெருநாள்களையும் முக்கியமான இரண்டு வணக்கங்களைத் தொடர்ந்துதான் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கிறான். ரமழானுடைய நோன்பைத் தொடர்ந்து ஈதுல் பித்ர் பெருநாளையும் தியாகத்தின் அடையாளக்குறியான ஹஜ் கடமையை அடுத்து ஈதுல் அழ்ஹா எனும் தியாகத் திருநாளையும் நாம் கொண்டாடுகிறோம். எனவே, இரண்டு பெருநாள்களும் முஸ்லிம்களின் உள்ளங்களில் சந்தோசத்தை ஏற்படுத்தும் இறை வெகுமதியாகவே அமைந்துள்ளன. எனவே, பெருநாள் தினத்தில் மகிழ்சியை வெளிப்படுத்தும் வகையில் இஸ்லாம் அங்கிகரித்த களியாட்டங்களில், விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியிருக்கிறது.

இந்தவகையில் எமது குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் இந்தப் பெருநாள் தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையில் ஆகுமான, அனுமதிக்கப்பட்ட விளையாட்டுகளை, கலைநிகழ்ச்சிகளை ஷரீஆ வரம்புகளைப் பேணி ஒழுங்கு செய்யவேண்டிய தேவையும் அவசியமும் இருக்கின்றது. இது மனிதனின் அழகியல் தேவை. இது நிறைவேற்றப்படாத போதுஅவர்கள் வீண் விளையாட்டுகள், கேளிக்கைகளின் பால் திசை திரும்புவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அந்தநாள் மகிழ்ச்சிக்குரியநாள். இறைவன், கொண்டாடுவதற்கென்றே அருளியதிருநாள். அதனை சோகதினம் போல் மாற்றிவிட்டு வேறுதினத்தில் கொண்ட நினைப்பது நோக்கம் மறந்தசெயலாகும். இந்தவருடம் கொண்டாடிய பெருநாள், அடுத்த வருடம் குடும்ப உறுப்பினர்களின் பேசுபொருளாக மாறவேண்டும். கொரோனா பேரிடர் காரணமாக நெருக்கடியான சூழலில் வாழும் போது நான்கு சுவர்களுக்குள் எத்தகைய விளையாட்டுகளை அறிமுகம் செய்துகொடுக்கலாம் என பெற்றோர்கள் சிந்திக்கவேண்டும்.

எனவே, பெருநாள் தினம் இறைவன் தந்த பரிசு. அன்றைய தினத்துக்கான புதிய ஆடைகள் விதம்விதமான உணவுகளை குடும்பத்தினருக்குப் பெற்றுக் கொடுப்பதில் பெற்றோர்கள் தாராளமாய் நடந்துகொள்ளவேண்டும். குறிப்பாக, பிள்ளைகளின் பெருநாள் தினசந்தோஷம் ஆடைகளிலும் உணவுவகைகளிலும் அதிகம் தங்கியிருக்கிறது. உங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி உங்களது பெற்றோருக்காகவும் ஆடைகள் வாங்குவது நல்லது. இயலுமானால் யாரேனும் ஒரு வசதியற்றவர்க்காகவும் வாங்கிக் கொடுங்கள். அதுபெருநாளின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும்.

பெருநாள் தினத்தை கொண்டாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்குகளையும் இஸ்லாம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது.

1) புத்தாடை அணிதல்

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள். 'நபி (ஸல்) அவர்கள் இரண்டு பெருநாள்களின்போதும் தன்னிடம் இருக்கின்ற ஆடைகளுள் மிக அழகான ஆடையைத் தெரிவுசெய்து அணிந்து கொள்வார்கள். அவர்களிடம் ஒரு விசேடமான ஆடை இருந்தது. குறிப்பாக, அந்த ஆடையை ஈதுல் பித்ர் பெருநாள் தினத்திலும் ஈதுல் அழ்ஹா பெருநாள் தினத்திலும் அவர்கள் அணிவார்கள்.'

2) பெருநாள் தினக் காலை உணவு

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளில் காலை உணவை அருந்திய பின்னரே தொழுகைக்குச் செல்வார்கள். ஆனால், ஹஜ்ஜுப் பெருநாளில் தொழுகையை நிறைவேற்றி வீடுவந்துதான் காலை உணவைச் சாப்பிடுவார்கள் என்று அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

3) ஒரு பாதையால் தொழுகைக்குச் சென்று மற்றொரு பாதையால் திரும்புதல்

ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். 'நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகைக்காகச் செல்கின்ற போது ஒரு பாதையால் செல்வார்கள். திரும்புகின்ற போது மற்றொரு வழியால் திரும்புவார்கள்.'(முஸ்லிம்) பள்ளிவாசல் சென்று தொழுவதற்கு அனுமதி இருந்தல், சுகாதார வழிகாட்டல்களைப் பேணி இந்த சுன்னாவை நடைமுறைப்படுத்துவோம்.

4) குறித்த நேரத்தில் தொழுதல்

பெருநாள் தொழுகையுடன் தொடர்புடைய மிகமுக்கியமான மற்றுமொரு ஸுன்னா பெருநாள் தொழுகையை குறித்த நேரத்தில் தொழுவது. ஆனால், இன்று பெருநாள் தொழுகை முடியுமான வரை தாமதப்படுத்தப்படுகிறது. இது நபியவர்களின் ஸுன்னாவுக்கு மாற்றமானது. அதிலும் குறிப்பாக, ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளுக்குரிய தொழுகையை முடியுமான வரை நேர காலத்தோடு தொழுவது மிக முக்கியமான ஒரு ஸுன்னா. ஜுன்துப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

'இரண்டு ஈட்டியின் அளவு உயரத்துக்கு சூரியன் உயரும் போது ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகையையும் சூரியன் ஒர் ஈட்டின் அளவுக்கு உயரும்போது ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிறைவேற்றுவார்கள். 'ஆதாரம்: அஹ்மத்

5) தக்பீர்சொல்லுவது

பெருநாள் தினத்தல் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்துதக்பீர் சொல்ல வேண்டும். அதுவும் முக்கிய ஸுன்னாக்களில் ஒன்று.'ஈத் பெருநாள்களை அல்லாஹ்வைப் புகழ்ந்தும் தக்பீர் கூறியும் அழகுபடுத்துங்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். துல் ஹஜ் மாதம் முதல் பத்து நாள்களிலும் தக்பீர் செல்லவது விரும்பத்தக்க சுன்னாவாகும். அறபா தினத்திலும் பெருநாள் தினத்திலும் அதனைத் தொடர்ந்துவரும் அய்யாமுத்தஷ்ரீக் எனப்படும் மூன்று தினங்களிலும் அதிகமதிகம் தக்பீர் செல்வது மிகவும் சிறந்தஅமலாகும்.

6) வாழ்த்துத் தெரிவித்தல்

பெருநாள் தினத்தில் நிறைவேற்றவேண்டிய மற்றுமொரு ஸுன்னா இருக்கின்றது. அதுதான் வாழ்த்துத் தெரிவிப்பது. பெருநாள் தினத்தில் நபித் தோழர்கள் சந்தித்துக் கொண்டால் 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும்' (அல்லாஹ் உங்களையும் என்னையும் பொருந்திக் கொள்வானாக) என்று வாழ்த்துக் கூறியவர்களாக முஸாபஹா, முஆனகா செய்து கொள்வார்கள். இது வெறுமனே ஒரு வாழ்த்து மட்டுமல்ல, ஒர் உயர் பிரார்த்தனையும் கூட.

ஹஜ்ஜுப் பெருநாள் நோன்புப் பெருநாளைவிடகொஞ்சம் வித்தியாசமானது. காரணம் ஹஜ்ஜுப் பெருநாளைத் தொடர்ந்துவரும் மூன்று நாள்களிலும் நோன்பு வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அது கொண்டாடி மகிழவேண்டியநாள். அந்தநாள்களில் ஏழைஎளியவர்களும் இல்லாதவர்களும் பசியாற வேண்டும் என்பதற்காகவே குர்பான் கொடுப்பதை இஸ்லாம் கட்டாய சுன்னாவாக போதித்துள்ளது. எனவே அந்தத்தினங்களில் அதிகமதிகம் தானதருமங்கள் செய்வோம். உற்றார்கள், சுற்றத்தார்கள், அக்கம் பக்கத்தில் உள்ள அயலவர்கள் யாவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக் கவத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, பெருநாள் தினம் என்பது எமது குடும்பத்தினரிடையே, சகோதர சகோதரிகளுக்கு மத்தியில், அண்டை அயலவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டியநாள். எம்மைச் சூழவாழ்கின்ற அனைவர் மத்தியிலும் சாந்தி, சமாதானத்தை உருவாக்கவேண்டியநாள். அதற்கான சந்தர்ப்பத்தை பெருநாள் தின வணக்கங்கள் ஏற்படுத்தித் தருகிறது. அந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடையும் வகையில் பெருநாள் தினக் கொண்டாட்டத்தை அமைத்துக் கொள்வோம். கொரோனா உயிர்கொல்லி தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பின்பற்றி, எமது ஈமானிய உணர்வுகளைப் புதுபிப்போம்.

அனைவருக்கும் ஈதுல் அழ்ஹா தியாகத் தருநாள் வாழ்த்துகள்!

உன்னதத் திருநாளாக அமையட்டும்

ஜனாதிபதியின் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்து

இஸ்லாமிய சமூகம், தமது கலாசாரப் பாரம்பரியங்களை, எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கும் ஒரு தனித்துவமான காலகட்டமாகவும் இதனை பார்க்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் வாழ்வியலைப் பின்பற்றும் அனைத்து இஸ்லாமியர்களும் எதிர்பார்க்கும் ஈருலக வெற்றியையும் இறை நெருக்கத்தையும் அடைய, இந்த

ஹஜ் பண்டிகைக் காலம் உதவும்.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக, முன்னரைப் போலவே பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளின் பிரகாரம் செயற்படுவதற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது, அனைவரதும் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை நோக்காகக் கொண்டதாகும். இந்த விடயங்களில் விசேட கவனம் செலுத்தி, இந்தப் பண்டிகைக் காலத்தில் சமயக் கிரியைகளில் ஈடுபடுமாறு நினைவூட்ட விரும்புகிறேன். புனித அல் குர்ஆனையும் முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கைத் தத்துவத்தையும் பின்பற்றும் இஸ்லாமியர்களான உங்கள் அனைவருக்கும், இந்த ஹஜ் பெருநாள், இறை நெருக்கத்தையும் ஆன்மீக உயர்ச்சியையும் பெற்றுத்தரும் உன்னதத் திருநாளாக அமைய எனது வாழ்த்துக்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

தியாகம், ஒற்றுமைக்கு முன்னுரிமை அளிக்கும் தினம்

தியாகம் மற்றும் ஒற்றுமைக்கு முன்னுரிமை அளித்து இன்றைய தினம் கொண்டாடப்படும் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் உலக வாழ் இஸ்லாமியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதானது,

'ஹஜ்'புனிதப் பயணத்தின் ஊடாக உலகம் முழுவதும் பரந்து வாழும் இலட்சக் கணக்கான இஸ்லாமியர்கள் ஒரே குறிக்கோளுடன் மனிதர்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் களைந்து இறைவனின்

முன்னிலையில் அனைவரும் சமமாக ஒற்றுமையாக பிரார்த்திக்கின்றனர்.

கொரோனா நோய்த் தொற்று காரணமாக கடந்த ஆண்டு போன்றே இம்முறையும் வழமை போன்று மக்காவுக்கான யாத்திரை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பள்ளிவாசல்களில் ஒன்றுகூடி மத வழிபாடுகளில் ஈடுபட வேண்டாம் என்ற சுகாதார துறையினரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப கொரோனா தொற்றுநோயை முற்றாக ஒழித்திட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இஸ்லாமிய வழிகாட்டுதல்களை சரியாகப் பின்பற்றி உலக மக்கள் அனைவரும் கொவிட் தொற்றிலிருந்து குறுகிய காலத்திற்குள் விடுப்பட வேண்டும் என இன்றைய இந்த மகத்தான நாளில் நாங்கள் அல்லாஹ்வை பிரார்த்திப்போம். உங்களது அனைத்து நற்செயல்களையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வாராக.

அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் எனது மகிழ்ச்சி நிறைந்த ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என பிரதமர் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரார்த்தனைகள் மூலம் சவால்களை வெல்வோம்

முஸ்லிம்கள் 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகத் திருநாளை கொண்டாடும் வேளையில், உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து வெற்றிபெற இறைவனை பிரார்த்திப்போம் என கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.அப்துல் ஹலீம் தனது ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கொரோனாவின் பிடியால் உலகம் முடக்கப்பட்டு, நாடு ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் இன்னொரு 'ஈதுல் அழ்ஹா'

பெருநாளை சந்தித்திருக்கிறோம். இரண்டாவது வருடமாக இம்முறையும் இலங்கையர்களுக்கு ஹஜ் யாத்திரைக்கான வாய்ப்பு கிட்டாத நிலை கவலையளிக்கிறது.

இது இப்படியிருக்க நாட்டில் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு இடையூறுகள் தொடர்கின்றன. இவ்வாறான சவால்களை இறை வணக்கங்கள்மற்றும் பிரார்த்தனைகள் மூலம் இறைவனிடம் முறையிட்டு மன்றாடுவோம். அத்தோடு, பொறுமையோடு மிக்க கவனமாக நடந்து பிரச்சினைகளிலிருந்து தவிர்ந்து கொள்வோம்

இத்தகைய சந்தர்ப்பத்தில், நபி இப்ராஹிம் (அலை), இஸ்மாயில் (அலை) ஆகியோரின் அளப்பரிய தியாகத்தை நினைவு கூரும் இவ்வேளையில் முஸ்லிம்கள் தங்களது தியாக உணர்வையும், ஈமானிய உணர்வையும் மேலும் மெருகூட்டிக்கொள்கிறார்கள் என்ற பேருண்மையை புரிந்துகொள்ள வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

விசுவாசம், ஏழ்மை, தியாகம் பேணுவோம்

தாய், தந்தை, குழந்தைகளுக்கிடையிலான பாசம் இறைவனுக்கும் அவன் தூதனுக்கிடையிலான உறவு நம்பிக்கையின் உச்சகட்ட விசுவாசம், ஏழ்மை, பொறுமை, தியாகம் என பல்வேறு விடயங்களை உணர்த்தும் வரலாற்றின் தியாக நாளாம் இன்றைய ஹஜ்ஜுப்பெருநாளை இறைவனின் நினைப்புடன் காலத்தின் கஷ்டத்தையும் உணர்ந்து கொண்டாடிக்கொண்டிருக்கும் இஸ்லாமிய உறவுகள் எல்லோருக்கும் என்னுடைய ஹஜ்ஜுப்பெருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.இவ்வாறு

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். கொரோனாவின் மூன்றாம் அலை உலகை மட்டுமின்றி எமது நாட்டையும் வெகுவாக தாக்கியுள்ளது. இஸ்லாமிய அடிப்படைகளில் ஒன்றான சகோதரத்துவத்தை பேணி எமது மற்றைய சகோதரனும் இந்த தொற்றுக்கு ஆளாகாமல் பாதுகாத்து நாமும் நமது குடும்பத்தையும் பாதுகாத்து சுகாதார வழிமுறைகளை பேணி இந்த நல்லநாளிலும் நமது நலனுக்காக உழைக்கும் சுகாதார, பாதுகாப்பு துறையினரை மனதில் கொண்டு வீடுகளில் அமைதியாக இந்த தியாக நாளை கொண்டாடுவோம். இன்றைய நாளில் யாரெல்லாம் கொரோனா உட்பட எந்தந்த நோய்களினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு இறைவன் நல்ல சுகத்தையும், தேக ஆரோக்கியத்தையும் வழங்க பிராத்திப்பதுடன் நாடு விரைவில் இந்த பெருந்தொற்றிலிருந்து விடுபட பிராத்திக்கிறேன் என வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புனிதத் திருநாளில் பிரார்த்திப்போம்

மனித வாழ்வுக்கு சவாலாக உருவெடுத்துள்ள கொரோனா எனும் ஆட்கொல்லி நோயிலிருந்து மனித சமுதாயம் மீட்சி பெற இப்புனிதத் திருநாளில் பிரார்த்திப்போம் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

"மனிதனைப் புனிதப்படுத்துகின்ற ஹஜ் எனும் தியாகம் நிறைந்த வணக்கம் எமக்கு நிறைய படிப்பினைகளைக் கற்றுத் தருகின்றது. ஒற்றுமை, சகோதரத்துவத்துக்கு எடுத்துக்காட்டான ஒரு

விடயம் ஹஜ்ஜை விட வேறு எதுவும் இருக்க முடியாது. ஹஜ் போதிக்கும் தத்துவங்களை கடைப்பிடிப்போமாயின் சமூகத்தில் ஒருபோதும் பிளவுகள் ஏற்பட வாய்ப்பிருக்காது. தவிரவும் இறையச்சம் பேணி, தீய நடத்தைகளைத் தவிர்த்து, நற்செயல்களில் ஈடுபடவும் துன்ப, துயரங்களின்போது பொறுமை, சகிப்புத்தன்மையை கடைப்பிடிக்கவும் எவரிடமும் விரோதம், குரோதம், பகைமை பாராட்டாமல் அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்வதற்கும் ஹஜ் வழிகாட்டுகிறது.

கொரோனா தொற்று வீரியமடைந்துள்ள ஒரு இக்கட்டான சூழ்நிலையிலேயே முஸ்லிம்களாகிய நாங்கள் இந்த ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றோம். இக்கால சூழலில் சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களை முழுமையாக கடைப்பிடித்து, கொவிட் பரவல் கட்டுப்பாட்டுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை எல்லோரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இதவேளை,அனைத்து முஸ்லிம்களுக்கும் இனிய பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

TK Newspaper

ஈராக்

பக்தாத்

குண்டு வெடிப்பில் 35 பேர் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சன நெருக்கடியான சந்தை ஒன்றில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குறைந்தது 35 பேரைக் கொன்றதுடன், 60 பேரைக் காயப்படுத்தியுள்ளார்.

ஹஜ் பெருநாளுக்கு முன்னதாகவே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அந்தவகையில், பெரும்பாலான கொள்முதலாளர்கள் பண்டிகைக்கு முன்பதாக உணவை வாங்குபவர்களால் சந்தை நிறைந்திருந்தது.

இந்நிலையில், காயமடைந்த சிலர் கவலைக்கிடமாக இருக்கின்ற நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம் நிலவுகிறது.

உயிரிழந்தவர்களின் சிறுவர்களும் பெண்களும் உள்ளடங்குவதோடு, சில கடைகள் தாக்குதலில் எரிந்துள்ளன.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக்குழு உரிமை கோரியுள்ளது.

பாகிஸ்தான்

பஸ் விபத்தில் 33 பேர் உயிரிழப்பு

பஸ் ஒன்று கொள்கலன் ட்ரக் ஒன்றுடன் போக்குவரத்து நெருக்கடியான மத்திய பாகிஸ்தான் நெடுஞ்சாலையில் நேற்று (20) மோதியதாக பொலிஸாரும், மீட்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இதில், குறைந்தது 33 பேர் கொல்லப்பட்டதுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர்.

நிறைந்திருந்த குறித்த பஸ்ஸில், பெரும்பாலும் ஹஜ் பெருநாள் விடுமுறைக்காகச் சென்ற தொழிலாளர்களே பயணித்திருந்தனர்.

பயணிகள் எண்ணிக்கையை விட, அதிகமானோரைக் கொண்டிருந்த பஸ்ஸானது சியல்கொட்டிலிருந்து புறப்பட்டு, விபத்து இடம்பெறும்போது பஞ்சாப் மாகாணத்தின் தனுசா வீதியூடாக பயணித்துள்ளது.

இந்நிலையில், குறிப்பாக எதனால் விபத்து இடம்பெற்றது என்பது இன்னும் விசாரணையில் உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஹஸன் ஜாவீட் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்

ஜனாதிபதி மாளிகைக்கு அருகில்

தரையிறங்கிய றொக்கெட்டுகள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை நேற்று (20) றொக்கெட்டுகள் தாக்கியதோடு, ஹஜ் பெருநாள் தொழுகைக்கான ஆயத்தங்களின்போது ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலும் தரையிறங்கியுள்ளன.

“ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியும் ஏனையவர்களும் வெளியக ஒன்றுகூடல் ஒன்றில் அமைதியாகத் தொழுகையைத் தொடர்ந்திருந்ததை சமூக வலைத்தள காணொளிகள் வெளிக்காட்டியுள்ளன. மாளிகைக்கு வெளியே மூன்று றொக்கெட்டுகள் தரையிறங்கியதாகத் தெரிவித்த உள்நாட்டமைச்சின் பேச்சாளர், உடனடியான காயம் எதுவும் இருப்பதாக அறிக்கைகள் இல்லை எனக் கூறியுள்ளார்

எவ்வாறெனினும், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரஃப் கானியும், ஏனையவர்களும் வெளியக ஒன்றுகூடல் ஒன்றில் அமைதியாகத் தொழுகையைத் தொடர்ந்திருந்ததை சமூக வலைத்தள காணொளிகள் வெளிக்காட்டியுள்ளன.

மாளிகைக்கு வெளியே மூன்று றொக்கெட்டுகள் தரையிறங்கியதாகத் தெரிவித்த உள்நாட்டமைச்சின் பேச்சாளர் மிர்வாய்ஸ் ஸ்டனிஸ்காய், உடனடியான காயம் எதுவும் இருப்பதாக அறிக்கைகள் இல்லை எனக் கூறியுள்ளார்.

நைஜீரியா

தாக்குதல் ஜெட்டை வீழ்த்திய கொள்ளைக்காரர்

கொள்ளைக்காரரிடமிருந்து தீவிரமான துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக நைஜீரிய தாக்குதல் ஜெட் ஒன்று, வட மேற்கு ஸம்ஃபரா மாநிலத்தில் வீழ்ந்துள்ளது.

இந்நிலையில், ஜெட்டிலிருந்து வெளியேறிய விமானி தப்பித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக நைஜீரிய விமானப் படை நேற்று முன்தினம் (19) தெரிவித்துள்ளது.

இதன்போது ஸம்ஃபாரா-கடுனா எல்லையில் நடவடிக்கை ஒன்றின் பின்னர் ஜெட்டானது தளத்துக்கு திரும்பிக் கொண்டிருந்துள்ளது.

நேட்டோ

அமெரிக்கர்களுக்கு

பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது கனடா

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காரணமாக 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அமெரிக்காவுடனான தரைவழி மற்றும் வான்வழி பாதையை கனடா மூடி வைத்தருந்தது.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசி முழுமையாகப் போட்டுக்கொண்ட அமெரிக்கர்கள் எதிர்வரும் ஒகஸ்ட் 9ஆம் திகதி முதல் கனடா வருவதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் செப்டெம்பர் 7ஆம் திகதிக்குப் பிறகு, தடுப்பூசி செலுத்திக்கொண்ட அனைத்து வெளிநாட்டுப் பயணிகளுக்கும் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக கனடா அறிவித்துள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்காவுடனான எல்லையை கனடா திறக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ. அமெரிக்கா

மைக்ரோசொஃப்ட் சேவர்கள் மீது

இணையவழி தாக்குதல்

சீனா மீது குற்றச்சாட்டு

இவ்வாண்டு ஆரம்பத்தில் பாரிய இணைய வழித் தாக்குதல் ஒன்றை சீனா நடத்தியதாக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன குற்றஞ்சாட்டியுள்ளன.

மைக்ரோசொஃப்ட் பரிமாற்ற சேவர்களை இலக்கு வைத்த குறித்த தாக்குதலானது, பூகோள ரீதியில் குறைந்தது 30,000 நிறுவனங்களைப் பாதித்திருந்தது.

இத்தாக்குதல் மூலம், பாரியளவில் உளவு பார்த்திருக்க முடிந்திருக்கும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இந்தத் தடகள வீரர்களை

ஒலிம்பிக்கில் அவதானியுங்கள்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளானவை நாளை மறுதினம் (23) ஆரம்பமாகவுள்ள நிலையில், இப்பத்தியானது அதில் அவதானிக்கப்பட வேண்டிய தடகள வீரர்களை நோக்குகிறது.

வழமை போன்று இல்லாது இக்கொரோனா காலத்தில் ஒலிம்பிக் தொடர்பான எதிர்பார்ப்பு குறைவாகவே காணப்படுகின்றபோதும் ஒலிம்பிக் போன்ற ஒரு நிகழ்வே தளர்ந்து போயுள்ள மனங்களை ஊக்கமடையச் செய்யும் கருவியாக நோக்கப்படுகிறது.

அந்தவகையில், வழமை போன்று உலகின் வேகமான மனிதனான உசைன் போல்ட், நீச்சல் ஜாம்பவானான மைக்கல் பெல்ப்ஸ் ஆகியோரின் விளையாடும் பருவகாலம் முடிவடைந்த நிலையில், அடுத்த தலைமுறை வீரர்களே இம்முறை ஒலிம்பிக்கில் தாக்கம் செலுத்தவுள்ளனர்.

இதில் முதன்மையானவராக ஐக்கிய அமெரிக்காவின் ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான சிமோன் பைல்ஸ் காணப்படுகின்றார். கடந்த றியோ ஒலிம்பிக்கில் நான்கு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்ற பைல்ஸை நட்சத்திரமாக பலர் கருதுகின்றனர். அந்தவகையில், இம்முறையும் இவர் இப்போட்டிகளில் வென்றால், இப்போட்டிகளில் இவ்வாறு பதக்கங்களைத் தக்க வைக்கும் இரண்டாவது வீராங்கனையாக காணப்படுவார்.

இதேவேளை, நீச்சல் பக்கம் றியோ ஒலிம்பிக்கில் இரண்டு உலக சாதனைகளுடன் ஐந்து தங்கப் பதக்கங்களை வென்ற கேட்டி லெடக்கி, இம்முறையும் அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றார். 200, 400, 800 மீற்றர் பிரீஸ்டைல் போட்டிகளுடன் இம்முறை அறிமுகப்படுத்தப்படும் 1,500 மீற்றர் பிரீ ஸ்டைலிலும் 24 வயதான லெடக்கி வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இளைய தலைமுறை வீராங்கனைகளுக்கு மத்தியில் 35 வயதான ஐக்கிய அமெரிக்காவின் அலிஸன் பீலிக்ஸும் போட்டி போடுகின்றார். ஆறு ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை கொண்டுள்ள பீலிக்ஸே, தடகள வீராங்கனைகளில் இவ்வளவு அதிகமான பதக்கங்களை வென்றவராகக் காணப்படுகின்றார்.

இன்னுமொரு சிரேஷ்ட வீரரான கென்யாவின் எலியுட் கிப்சோஞ்சேயும் அவதானிக்கப்படுவராகக் காணப்படுகின்றார். மரதனோட்டத்தில் ஜாம்பவனான 36 வயதான கிப்சோஞ்சே மாத்திரமே மரதனோட்டத்தை இரண்டு மணித்தியாலங்களுக்குள் பூர்த்தி செய்த ஒருவராகக் காணப்படுகின்றார். கடந்த 2016ஆம் ஆண்டு தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இதேவேளை, குறுந்தூர ஒட்டத்திலும் இன்னொரு சிரேஷ்ட வீராங்கனையான 34 வயதான ஜமைக்காவின் ஷெலி-ஆன் பிறேஸர்-பிறைஸ் சாதிக்கக் காத்திருக்கிறார். 2008, 2012ஆம் ஆண்டுகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்ற பின்னர், 2016ஆம் ஆண்டு வெண்கலப் பதக்கங்களையே பெற்ற இவர், ஒலிம்பிக் குறுந்தூரத்தில் பதக்கம் வென்ற வயதானவர் என்ற சாதனையை இம்முறை வெற்றி மூலம் பெறலாம். தவிர, மூன்று தடவைகள் 100 மீற்றர் ஒட்டத்தில் தங்கம் வென்ற சாதனையையும் இவர் ஏற்படுத்துவார்.

லிவர்பூலிருந்து

வெளியேறும் அணித்தலைவர்?

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் அணித்தலைவரான ஜோர்டான் ஹென்டர்சனின் எதிர்காலம் நிச்சயமற்றதாகக் காணப்படுகிறது.

ஏனெனில், லிவர்பூலுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள மத்தியகளவீரரான ஹென்டர்சனுடனான லிவர்பூலின் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் தற்போது முறிவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 31 வயதான ஹென்டர்சனை ஒப்பந்தம் செய்வது குறித்து லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனும் ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டோக்கியோ ஒலிம்பிக்கில்

அறிமுகமாகும் விளையாட்டுகள்

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள 32ஆவது ஒலிம்பிக் போட்டிகளின்போது ஐந்து விளையாட்டுகளையும் மொத்தமாக 34 நிகழ்வுகளையும் சர்வதேச ஒலிம்பிக் செயற்குழு சேர்த்துள்ளது.

இளம் பார்வையாளர்களை கவரும் பொருட்டும், விளையாட்டு நவீனப்படுத்தப்படுவதை பிரதிபலிக்கும் பொருட்டே குறித்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

அந்தவகையில், கராத்தே, ஸ்கேட்போர்டிங், ஸ்போர்ட் கிளைம்பிங், சேர்ஃபிங், பேஸ்போல் ஆகியனவே அறிமுகப்படுத்தப்படும் புதிய விளையாட்டுகள் ஆகும்.

இதில், ஒலிம்பிக்குக்கு பேஸ்போல் புதிது இல்லை என்றபோதும் கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து குறித்த விளையாட்டு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இவை தவிர கலப்பு 4,400 மீற்றர் அஞ்சலோட்டம், ஆண்களுக்கான 800 மீற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல், பெண்களுக்கான 1,500 மீற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல், 4,100 மீற்றர் கலப்பு மெட்லே அஞ்சல் உள்ளிட்ட போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

அயர்லாந்தை வென்ற தென்னாபிரிக்கா

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மலஹைட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் 33 ஒட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

தென்னாபிரிக்கா: 165/7 (20 ஒவ.) (துடுப்பாட்டம்: ஏய்டன் மர்க்ரம் 39 (30), டேவிட் மில்லர் 28 (21), றஸி வான் டர் டுஸன் 25 (18), குயின்டன் டி. கொக் 20 (09), ககிஸோ றபாடா ஆ.இ 19 (09) ஒட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 3/39 [4], சிமி சிங்க் 2/19 [4], ஜோஷ் லிட்டில் 2/27 [4])

அயர்லாந்து: 132/9 (20 ஒவ.) (துடுப்பாட்டம்: ஹரி டெக்டர் 36 (34), பரி மக்கார்தி ஆ.இ 30 (25), அன்டி போல்பிரயன் 22 (16), ஜோஷ் லிட்டில் ஆ.இ 15 (18) ஒட்டங்கள். பந்துவீச்சு: தப்ரையாஸ் ஷம்சி 4/27 [4], லுங்கி என்கிடி 2/18 [4], ஜோர்ஜ் லின்டி 2/26 [4], ககிஸோ றபாடா 1/28 [4])

போட்டியின் நாயகன்: தப்ரையாஸ் ஷம்சி